ஏகம்பத்துறை எந்தாய் போற்றி

திருச்சிற்றம்பலம்

அருள்மிகு ஏலவார்குழலி (காமாட்சி) உடனுறை

# அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில்

காஞ்சிபுரம் – 631 502. காஞ்சிபுரம் மாவட்டம்



## புராண வரலாற்றுச் செய்தி

மாதவம் செய்த தென்திசை எனச்சேக்கிழார் பெருமானால் போற்றப்பெறும் அத்தென்திசையில் தொண்டை நாட்டின் திலகமாய்த் திகழ்வது காஞ்சியம்பதி. பழைமை, புதுமை இவ்விரண்டிற்கும் நிலைக்களனாய்த் திகழும் அப்பகுதியில் உலகம் உய்ய எழுந்தருளி அருள் பாலிப்பவரே திருவேகம்பப்பெருமான்.

உமை அன்னை கயிலையில் சிவபெருமானின் திருக்கண்களை விளையாட்டாக தம்கரங்களால் மூட அவ்வளவில் எல்லா உலகங்களும் இருண்டன. சிவபெருமான் பார்வதிதேவி செய்த குற்றத்தைப் போக்க சிலகாலம் தன்னைப்பிரிந்து பூலோகம் சென்று பூசித்துப் பின் தன்னை அடையுமாறு கூறினார். பார்வதி தேவியும் கயிலையை விட்டு காஞ்சியை அடைந்து கம்பை ஆற்றங்கரையில் மாமரத்தின் அடியில் மணலால் சிவலிங்கம் அமைத்து பூசித்து வந்தார். இறைவன் ஆணைப்படி ஆகமத்தின் படி பூஜை செய்த உமை அம்மையை அருள்பாலித்து ஏற்க இறைவன் ஒரு மாமரத்தின் மூலத்திலிருந்து தோன்றினார். உமையின் தவத்தைக் கலைக்க கம்பாநதியைப் பெருக்கெடுத்தோடி சிவலிங்கத்தை அடித்துச்செல்லச் செய்ய பார்வதியோ சிவலிங்கம் அழியாதபடி தன் திருக்கரங்களால் அனைத்தார். இறைவன் அம்மையார் தழுவக் குழைந்தார். பின்னர் இறைவன் தோன்றி உமை அம்மைக்கு அருள்பாலித்தார் என்பது புராண வரலாறாகும்.

## பெயர்க்காரணம் : -

இத்தலத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் இறைவன் திருநாமம் – ஏகாம்பரநாதர் இறைவியின் திருநாமம்- ஏலவார்குழலி.

ஏகாம்பரம் = ஏகம்+ஆம்ரம் = ஏகம் என்பதன் பொருள் ஒன்றானவன் தன்னிகரற்ற தலைவன். ஆம்ரம் என்றால் ஒற்றை மாவின் (மாமரத்தின்) மூலத்தில் இருந்து தோன்றியவன் என்பதாகும் எனவே இப்பெயர் வழங்கலாயிற்று. சமயகுரவர் நால்வரும் இப்பெருமானைத் திருவேகம்பன் என்றே வழங்குதலைக் காணலாம்.

## பாடல்பெற்றதலம்:-

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் இந்நால்வராலும் பாடப்பெற்ற தலமாகும். மற்றும் காளமேகப்புலவர், இரட்டைப் புலவர்களாலும், பட்டினத்தடிகள் போன்றோராலும் இத்தலப் பெருமை புகழ்ந்து பாடப் பெற்றுள்ளமை அறியலாம்.

## சிறப்பு அம்சம் :-

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் இரண்டு கண்களையும் இழந்த நிலையில் இத்திருக்கோயிலை அடைந்தே ஏலவார்குழலியையும், இறைவனையும் வேண்டிப் பணிந்து தம் இடக்கண்ணைப் பெற்றார்.

## இராஜகோபுரம் :-

இதன் உயரம் 192 அடி, இது ஒன்பது நிலைகளைக் கொண்டது. இதன் முதல் தளத்தின் மேலுள்ள வெளியிடத்தில் மேற்புறத்தில் கிருஷ்ணதேவராயர் தம் அரசியல் அலுவலர்களுடன் இருப்பது போன்ற உருவங்கள் உள்ளன.

இராஜகோபுரத்தின் வாயிலின் கிழக்குப் பக்கத்து சந்நிதியில் விநாயகரும் மேற்குப் பக்கத்துச் சந்நிதியில் மயில் வாகனனும் வீற்றிருக்கிறார்கள்.

ஏகாம்பரநாதர் சந்நிதி வீதியில் கோயிலின் முன்பு நான்குகால் மண்டபமும், பதினாறுகால் மண்டபமும் அமைந்து இராஜகோபுரத்தின் அழகுக்கு அழகு செய்கிறது.

## தலவிருட்சம் : -

சுமார் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மாமரமே இத்திருக்கோயிலின் தலவிருட்சமாகும். வேதங்கள் நான்கும் கிளைகாளக அமைந்தது இது என்பது வரலாற்று உண்மைகளாகும். ஐந்து பிரகாரங்களை கொண்டு திகழும் இத்திருக்கோயிலில் இரண்டாம் பிரகாரம் கலை நுணுக்கங்களோடு காட்சியளிக்கிறது. இப்பிரகாரத்தில் பிரளயம் காத்த அம்மன் சன்னதியில் மாவடியும் அமைந்துள்ளதைக் காணலாம்.

**பல்லவர் :-**

விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் கி.பி. 1509-ஆம் ஆண்டு இராஜகோபுரமும், மதிற்சுவரும் ஆயிரங்கால் மண்டபமும் கட்டுவித்தார்.

இராஜகோபுரமும், பல்லவர் கோபுரமும் தெற்கு நோக்கிக் கட்டப்பட்டுள்ளன. இவ்விரண்டு கோபுரங்களின் வாயில்களின் வலப்பக்கம் விநாயகரும் இடப்பக்கம் மயில் மீது ஆறுமுகனும் வள்ளியும் தேவயானையும் சந்நிதிகளில் காட்சி தருகின்றார்கள். ஆனால், கோயிலும் மூலஸ்தானமும் கிழக்கு நோக்கிக் கட்டப்பட்டு வாயிலின் வலப்பக்கம் முருகனும் இடப்பக்கம் விநாயகரும் அமைக்கப்பட்டுள்ளனர். மூலஸ்தானத்தில் ஏகாம்பரரும் காமாட்சியும் அமர்ந்திருக்க அவர்களுக்குப் பின்னால் முதல் பிரகாரம், இரண்டாம் பிரகாரம் இரண்டிலும் மேற்குப் பகுதியின் தென்கோடியில் விநாயகரும், வடகோடியில் முருகனும் இருக்கும்படி இக்கோயில் கட்டப்பட்டுள்ளது.

**கரிகாற் சோழன் :-**

இச்சிலை துவஜஸ்தம்ப மண்டபத்திலிருந்து கோயிலுக்குள் நுழையும் வாயிலின் தென் பக்கம் உள்ளது. இச்சிலையின் இடக்கால் வீங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. சுட்டெரிக்கப்பட்டு, உயிர் தப்பி, தீப்புண்ணால் கால் கறுத்து விட்டதால் கரிகாற் பெருவளத்தான் என்ற நற்பெயர் பெற்று இமயத்தில் புலிச் சின்னம் பொறித்த சோழமன்னன் கற்சிலை என்பதில் ஐயமில்லை.

திருகச்சி மயானம் துவஜஸ்தம்த்திற்குத் தென்பக்கத்தில் அமைந்துள்ளது. இச்சந்நிதியின் சுவர்களின் பண்டன் என்னும் அசுரன் வரலாறு உள்ளது. அவன் தான் பெற்ற வரத்தின் வலிமையால் தேவர்கள் மற்றும் மக்களின் வலிமையைக் கவர்ந்து துன்புறுத்தி வந்தான். திருமால், நான்முகன், தேவர்கள் வேண்டியபடி சிவபெருமான் கச்சி மயானத்தில் வேள்வி நடத்தினார்கள். அதில் உயிரினங்களை ஆகுதியாக இட்டு அழித்தார். பின்னர் பண்டனைத் தவிர மற்றவர்களை உயிர் பெற்று எழும்படிச் செய்தார். அவர் உயிரினங்களை வேள்வித் தீயில் இட்டுச் சாம்பலாக்கிய இடம் கச்சி மயானம் எனப்பட்டது. சிவபெருமான் வேள்விக்கு அமைத்த நெய்குண்டம் சிவகங்கை தீர்த்தமாகும்படி அருள்புரிந்ததாகப் புராணம் கூறும்.

**ஆயிரங்கால் மண்டபம் : -**

இம்மண்டபம் பல்லவர் கோபுரம் முன்பு கவினுற அமைந்துள்ளது. இதில் இப்போது 616 தூண்கள் மட்டுமே இருக்கின்றன. இதில் விகட சக்கர விநாயகரும் முருகனும் உள்ளனர். விகடசக்கர விநாயகரே தலவிநாயகர் ஆவார். இப்பிரகாரம் கோயிலின் வெளிப்புற மதிற் சுவரைச் சுற்றி நாற்புறமும் உள்ள வீதிகளைக் கொண்டது.

## தீர்த்தங்கள் :-

சிவகங்கைத் தீர்த்தம், கம்பைத் தீர்த்தம், சர்வ தீர்த்தம், கங்கை கொண்டான் மண்டபம் அருகிலுள்ள மங்கள தீர்த்தம் ஆகிய நான்கு தீர்த்தங்கள் உள்ளது.

## ஏகாம்பரநாதர் கோயில் கல்வெட்டு தரும் செய்திகள்:-

சோழ மன்னர்களும், பல்லவ மன்னர்களும், விஜயநகர மன்னர்களும் மற்றவரும் திருக்கோயிலுக்கு பொருள் தந்தைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

## வழிபாட்டுக் காலங்களும், முறைகளும்:-

மக்கள் நலன் குறித்துக் கோவில்களில் வெவ்வெறு காலங்களில் பூஜைகள் நிகழ்த்தப் பெறுகின்றன. இக்கோயிலில் நாள்தோறும் ஆறு கால வழிபாடுகள் நடக்கின்றன. அவை நித்திய பூஜை எனப்படும். இவை பின்வரும் காலமுறைப்படி நடைபெறுகின்றன.

1. **விடியற்காலம்** (உஷக் காலம்) காலை 6-7 மணி,
2. **கால சந்தி** (காலை) 8-8.30
3. **உச்சிக் காலம்** (நண்பகல்) 11 – 12 மணி
4. **மாலைக்காலம்** (பிரதோஷ காலம்) 5-5.30 மணி
5. **சாயங்காலம்** (சாயரட்சை) 6-7 மணி
6. **நள்ளிரவு** (அர்த்தசாமம்) இரவு 8.45 – 9 மணி

திருக்கோயிலில் நிலாத்துண்டப் பெருமாளுக்கு எதிரில் உள்ள கிணற்று நீரே திருமஞ்சன (அபிஷேக) நீராகப் பயன்படுகிறது.

திரயோதசி நாளில் வரும் பிரதோஷ பூஜையின்போது பெருமான் இடப வாகனத்தில் அலங்காரத்துடன் உள் சுற்றிலும், வெளிசுற்றிலும் பவனி வருகிறார். இத்திருக்கோயிலில் நாள்தோறும் நடக்கும் பூஜைகளோடு நைமித்திய காமிக பூஜைகளும் நடைபெறுகின்றன.

## பிரம்மோற்சவம்:-

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவ விழா தொடங்கி, 13 நாட்கள் வெகுசிறப்பாக நடைபெறுகின்றது. இத்திருவிழாவில் முக்கிய திருவிழாவில் ஒன்றான பங்குனி உத்திர திருக்கல்யாண பெருவிழா விடியற்காலையில் நடைபெறும் என்பதும் இத்திருக்கோயில் பிரம்மோற்சவம் விளம்பரப்படுத்தப்பட்ட விழாவாகும் **(Notified Festivel)**

## அன்னதானம்:-

இத்திருக்கோயிலில் தினமும் 12.00 மணியளவில் அன்னதானம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அன்னதானம் நாள் ஒன்றுக்கு தினசரி செலவு 50 நபர்களுக்கு ரூ.750/- ஆகும்.

## திருக்கோயில் தரிசன நேரம்:-

காலை 6.00 மணி முதல் 12.30 மணி வரை

மாலை 4.00 மணி முதல் 8.30 மணி வரை

பக்தர்கள் அனுப்பும் பணவிடைகள், வங்கி வரைவோலைகள், காசோலைகள் ஆகியனவற்றை செயல் அலுவலர், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் – 631 502 என்ற முகவரிக்கு அனுப்பி உரிய இரசீது பெற்றுக் கொள்ளலாம்.

**Website : www.ekambaranathartemple.tnhrce.in**

**e-mail: Kanchiekambaranathar@gmail.com**

**e-mail: Kanchiekambaranathar@yahoo.com**